மனனம் செய்ய
இந்த வார வசனம்:

“ஆண்டவரோடு இணைந்து என்றும் மகிழுங்கள், மீண்டும் கூறுகிறேன், மகிழுங்கள்.”

(பிலி.4:4)

அதனால் நமக்கு நிகழும் அசம்பாவிதங்களைக் கண்டு அஞ்ச வேண்டாம் என அவர் கூறுகிறார். அகமகிழ்வோம் ஏனெனில் அவர் நம்மோடு அகமகிழ்கிறார். கடவுளின் மக்கள் துயர் கொள்ளக்கூடாது. காரணம் நம்மோடு இருக்கும் அவர் நம்மை காப்பார்.

இரண்டாவது வாசகத்தில், ஆண்டவரில் என்றும் மகிழ்ச்சியோடு இருக்க வேண்டுமென புனித பவுல் வலியுறுத்துகிறார். நமது மென்மையையும், புரிந்துணர்வையும் பிறர் அறிந்து கொள்ளட்டும். ஆறுதலும் ஊக்கமும் கிடைக்கும் போது நாம் எவ்வாறு மகிழ்ச்சி கொள்வோம். ஏனெனில் ஆண்டவர் அருகில் வந்துவிட்டார், எது குறித்தும் கவலை கொள்ள வேண்டாம் என அவர் கூறுகிறார். அனைத்திற்கும் நன்றியுள்ளவர்களாக அவரை நாடி செபிப்போம். அமைதியின் மன்னனான கடவுள், கிறிஸ்து இயேசுவில் நமது உள்ளத்தையும் மனதையும் ஒப்புக்கொடுப்போம். சுருங்ககூறின், கடவுளுக்கு வழிவிட்டு, அனைத்தையும் ஒதுக்கி வைப்போம். ஒவ்வொரு நாளும் நமது உள்ளத்தையும் மனதையும் வாட்டிவதைக்கும் கவலை, அச்சம், இடர், அவநம்பிக்கை, சந்தேகங்கள், ஏமாற்றங்கள், ஆகியவற்றை விட்டொழிக்க அவரது இரக்கத்தையும் கனிவையும் வேண்டுவோம்.

நற்செய்தியில், வாழ்க்கை வழியை திருமுழுக்கு யோவானிடம் கேட்டு மனந்திருந்திய மக்கள், வீரர்கள், வரி தண்டுவோரைப் போல் “நாங்கள் என்ன செய்ய வேண்டும்” எனும் நம்பிக்கையில் இயேசுவிடம் கேட்போம்? மனந்திரும்ப மட்டும் யோவான் கூறவில்லை. பிறருக்கு உதவிக்கரம் நல்கும்படியும் அவர் கூறுகிறார். “மன்னிப்பு” என்று சொல்வதைவிட மனந்திரும்புதல் ஆழமானது. உண்மையான மனந்திரும்புதல் செயலுக்கு நம்மை இட்டுச் செல்ல வேண்டும். அந்த செயல், பரிவிரக்கத்தோடு நிகழ வேண்டும்.

நற்செய்தியில் மனம்மாறிய வீரர்களும் வரி தண்டுவோரும் திருமுழுக்கு யோவானைக் கேட்டது போல, நம்பிக்கையோடு இயேசுவிடம் நாமும் கேட்போம், “நாங்கள் என்ன செய்ய வேண்டும்?” மனம் மாற வேண்டும் என்று மட்டும் யோவான் கூறவில்லை. மாறாக அதனை செயல்களில் காட்ட வேண்டும் என வலியுறுத்துகிறார். “மன்னித்து விடுங்கள்” என்பதோடு மனம் மாற்றம் நின்று விடுவதில்லை. மனம் மாற்றமும் நம்பிக்கையும் பிரிக்க முடியாது. இரண்டும் இணைந்தே வரும். உண்மையான மனம் மாற்றமும் நம்பிக்கையும் நற்செயலுக்கு இட்டுச் செல்லும். அந்த செயல் பரிவிரக்கத்தைப் பிரதிபலிக்க வேண்டும். இறைமக்கள் மீது காட்டப்படும் பரிவிரக்கம் காட்டுபவரின் இறைச்சாயல் மிளிரும். இறைவன் பார்வையில் நேர்மையாக இருந்து, **இறைக்கரத்தால் வழிநடத்தப்பட்டு அவரில் அகமகிழ்வோம்.**

**இன்றைய வாசகங்கள்:**

செப். 3: 14-18;
எசா. 12: 2-3, 4-6;
பிலி. 4: 4-7;
லூக். 3: 10-18.

INTERNAL CIRCULATION ONLY
BUL 50/2021

*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org

12 டிசம்பர் 2021

# Newbec

NEW WAY OF BEING CHURCH

திருவருகை காலம் 3ம் ஞாயிறு

எதிர்நோக்கு: நம்பிக்கை, வாழ்தல், அளித்தல்

மாதாந்திர கருப்பொருள்:

**அஞ்சாதீர்கள், நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்**

# கடவுளுக்கு வழி விட்டு, மற்றதை விட்டுவிடுங்கள்

இயேசுவுக்காக கிறிஸ்மஸ் ஏற்பாடுகளை எவ்வாறு கவனிக்கிறோம்? அதற்கு, இன்றைய வாசகங்கள் வழியைக் காட்டுகின்றன. முதலில், நமது கடவுள், எதிர்நோக்கின் கடவுள், சீராக்கும் கடவுள். அவரது மக்களிடையே நிலவும் தீமையை அகற்றி விட்டு, அமைதியை நிரப்புவார். பாவம், தீமை, வன்செயல் முதலியவற்றிலிருந்து அவர் நம்மை புனிதப்படுத்தி அமைதியும் மகிழ்ச்சியும் பொங்கும் காலத்தை வழங்குவார்.

